**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**
**வத்திராயிருப்பு**

**Cr.M.P. 514 /2024**
**தேதி:30.05.2025**

PW.1.சீனிவாசன்

சீனிவாசன், த/பெ.கோவிந்தராஜன், தெற்கு அக்ரகாரத் தெரு, வத்திராயிருப்பு என்பவரின் பிரமாணவாக்குமூலம்.

கடந்த 11.05.2022ம் தேதியில் இரவு 8.00 மணியைப் போல் நான் எனது வீட்டில் டிவி பார்த்துக் கொண்டிருந்த போது யாரோ 4 பேர் வீட்டிற்குள் புகுந்தார்கள். வீட்டிற்குள் வந்த 4 பேரும் என்னை சராமாரியாக தாக்கி, என்னை வீட்டை விட்டு வெளியே இழுத்து சென்றார்கள். நான்கு பேரும் என்னைத் தாக்கியதில் எனக்கு இடது காது கேட்கும் திறன் இழுந்து விட்டது. மேலும் எனது கைவிரல்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் உதவியுடன் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். ஆனால் நான் தனியார் மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வந்தேன். பின்னர் எனது உடல்நிலை சீரான உடன் 2 நாட்கள் கழித்து புகார் கொடுப்பதற்காக வத்திராயிருப்பு காவல் நிலையத்திற்கு சென்றேன். நான் கொடுத்த புகாரை ஏற்றுக் கொள்ள மறுத்து சமரசமாக பேசி தீர்க்கும்படி கூறி என்னை திருப்பி அனுப்பி விட்டார்கள். பின்னர் வத்திராயிருப்பு காவல் நிலையத்திற்கும், விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியிருந்தேன். மேற்படி புகாரின் அடிப்படையில் வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் என்னை விசாரித்து CSR மனு வழங்கினார்ள். பின்னர் தகவல் உரிமைச் சட்டம் மனு செய்து மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களையும் காவல் நிலையத்தில் இருந்து CSR நகலைப் பெற்றேன். மேற்படி சம்பவ தினத்தில் என்னைத் தாக்கி காயத்தை ஏற்படுத்தியவர்கள் சேது நாராயணன், ரெங்கராஜன், ஸ்ரீராம், வ.ரெங்கராஜன் ஆகியவர்கள்

தாக்கினார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு